1973 மார்ச் 22]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : உண்மையான வாரிசுகள் யார் என்று தெரிந்தால் அதைப்பற்றிக் கவனிக்கப்படும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் தாய்த் தமிழகத்தோடு இணைவதற்காக ஏற்பட்ட போராட்டத்திலே ஈடுபட்ட தியாகிகளுக்கு பென்ஷன் வழங்குவதற்கு ஆவன செய்யப்படும் என்று ஏற்கனவே முதலமைச்சர் அவாகள் கூறியிருக்கிறார்கள். அதற்கான விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன என்றும் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அந்த விவரங்கள் எந்த அளவிற்குச் சேகரிக்கப்பட்டிருக்கின்றன, அதைப் பற்றி அரசாங்கம் என்ன முடிவு செய்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலே சிறை சென்றவர்களுக்கு இதுபோன்ற ஓய்வூதியம் தரப்படுமா என்ற கேள்விக்கு நான் பதில் அளிக்கும்போது திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் கன்னியாகுமரி தாய்த்தமிழகத்தோடு இணைவதற்காகப் போராடிய வர்களுக்கும் ஓய்வூதியம் வழங்கப்படுமா என்று கேட்டார்கள். நான் அதற்குப் பதிலளிக்கும்பொழுது இரண்டும் சேர்த்து ஆலோசிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறேன். இரண்டும் சேர்த்து ஆலோசிக்கப்படும்.

திரு. சங்கரலிங்கனார் குடும்பத்திற்கு ஓய்வூதியம்.

* 462 வினா—திரு. என் கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு பெயர் மாற்றத்திற்காக உண்ணா நோன்பிருந்து உயிர் நீத்த தியாகி சங்கரலிங்கனார் அவர்களின் குடும்பத்திற்கு அரசு உதவித்தொகை அளிக்க திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஆம். தமிழ்நாடு பெயர் மாற்றத் திற்காக உண்ணாநோன்பிருந்து உயிர்நீத்த தியாகி சங்கரலிங்கனார் அவர் களின் மனைவி திருமதி செந்தியம்மாளுக்கு மாதம் ஒன்றுக்கு ஓய்வூதியம் ரூ. 150 26—1—1970லிருந்து அவர் ஆயுள்வரை அரசு 1970 பிப்ரவரி மாதம் வழங்கியுள்ளது.

திரு. இ.எஸ். தியாகராசன் : தலைவர் அவர்களே, திருத்தணி வட்டம் தமிழகத்தோடு இணைவதற்காக சிலம்புச் செலவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற போராட்டத்தில் சிறைசென்றவர்களுக்கும், அதிலே உயிர் நீத்தவர்களின் குடும்பங்களுக்கும் மானியங்கள் வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நாடு, மொழி, எல்லை இவைகளைக் காக்கப் போராடியவர்கள் யாராக இருந்தாலும் அரசு கவனிக்கும்.

திரு. மே.சி. தூயமணி : தமிழ்நாடு பெயர் மாற்றத்திற்காக உண்ணா நோன்பிருந்து உயிர்நீத்த தியாகி சங்கரலிங்கனார் அவர்களுக்கு சென்னை நகரிலே சிலையமைக்கும் உத்தேசம் அரசிற்கு உண்டா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இன்னும் அவர்கள் சொந்த ஊரில் சிலை அமைத்ததாகத் தகவல் இல்லை. அதற்குப் பிறகு அதைக் கவனிக்கலாம்.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவர் அவர்களே, கல்வித் துறையிலே தமிழகத்தின் வரலாற்றை எழுதுகிற நேரத்திலே அதிலே தியாகி சங்கரலிங்கனார் அவர்கள் பெயரும் இணைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தமிழ்நாடு என்று பெயரிட வேண்டுமென்பதற்காகப் போராடியவர்கள் பெயர்கள் எல்லாம் தமிழ்நாடு பெயர்வந்த வரலாறு எழுதப்படுகிற நேரத்திலே நிச்சயமாக இடம்பெறும்.

திரு. ப. முத்துசாமி : மொழிப் போராட்டத்திலே உயிர்நீத்த தியாகிகள் குடும்பத்திற்கும் இதுபோன்ற மானியங்கள் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : ஏற்கனவே அதற்குப பதில் சொல்லியிருக்கிறார்கள்.

திரு. வை .பாலசுந்தரம் : காங்கிரஸ் ஆட்சியிலே உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்த சங்கரலிங்கனார் பிறந்த ஊரிலே காங்கிரஸ் ஆட்சி அவருக்கு நினைவாலயம் எழுப்பப்பட்டது உண்மையா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : காங்கிரஸ் ஆட்சியிலே அவர் இறந்ததுதான் நினைவு.

திரு. ந. தருமலிங்கம் : சட்டப் பேரவைத் துணைத்தலைவரவர்களே, அதேபோல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது உயிர்நீத்தத் தியாகிகளின் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டிருக்கிற சலுகைகளை உயர்த்த அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்பொழுதுதான் அப்படிப்பட்ட குடும்பங்களுக்கு மானியத்தொகை அளிக்கப்பட்டு அது அமுலில் இருந்து வருகிறது. உடனடியாக உயர்த்த உத்தேசம் இல்லை.

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, இந்த நாட்டின் பெயர் மாற்றத்திற்காக உயிர் துறந்த திரு. சங்கரலிங்கனார் போன்றவர்களுக்கு சிலையமைப்பதை விட்டுவிட்டு அவர்களுடைய வாரிசுகளுக்குக் கல்விச் சலுகைகள், மற்ற குடும்ப உதவிகள் இவற்றைச் செய்து நல்ல பயனுள்ள வகையிலே செய்வதற்கு அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இதை மனத்திலே வைத்துதான் சங்கரலிங்கனார் துணைவியாருக்கு 1970-ம் ஆண்டு முதல் அவர் ஆயுள்வரை மாதம் ரூ. 150 ஓய்வூதியம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு வழங்கப்பட்டு வந்தது. சங்கரலிங்கனார் நினைவாக இந்த மண்ணுக்குத் " தமிழ்நாடு " என்று பெயர் வைத்திருக்கிறோம். அதுவே அவர்கள் செய்த தியாகத்திற்கு நல்ல மரியாதை ஆகும்